1993 ஏப்ரல் 19]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. கே. பி. ராஜு.

திரு. கே. பி. ராஜு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூரைச் சேர்ந்த காந்திபுரம், டவுன்ஹால், ஒப்பனக்கார வீதி போன்ற இடங்களில் சுரங்கப் பாதை அமைப்பது இட நெருக்கடி காரணமாக முடியாது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் அங்கு மக்கள் நெரிசலும் போக்குவரத்துக்கு இடையூறும் இருக்கின்ற காரணத்தால் சுரங்கப்பாதை அமைக்க இடவசதி இல்லை என்று சொன்னாலும், மேம்பாலமாவது கட்டப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுரங்கப் பாதை அமைப் பதுதான் எளிது. மேம்பாலம் கட்டுவதற்கு நிலம் கையகப் படுத்த வேண்டும். அங்குள்ள கடைகள் மற்றும் பல்வேறு பிரச்சினைகள் எல்லாம் வரும். ஆகவே, அது சாத்தியக்கூறான காரியம் அல்ல. ஆகவே இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில் சுரங்கப்பாதை அமைப்பதுதான் மிக எளிதான முறை. ஆகவே அதைப் பற்றியே அரசு பரிசீலிக்கலாம் என்று இந்தத் துறை கருதுகிறது.

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 393, டாக்டர் ஜி. ஆர். மாலா, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

393—

திருச்சிராப்பள்ளி சந்திப்பு ரவுண்டானா அருகே சுரங்க நடைபாதை கட்டுதல்.

*13841ஏ—டாக்டர் ஜி. ஆர். மாலா :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி ஜங்ஷன் ரவுண்டானா அருகே சுரங்க நடைபாதை கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

திட்டம் ஏதும் இல்லை.

[1993 ஏப்ரல் 19

டாக்டர் ஜி. ஆர். மாலா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நடப்பாண்டில் செய்து முடிக்கப்படும் என்ற நல்ல அறிவிப்பு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாயிலாக வரும் என்று எண்ணினேன். ஆனால், இல்லை என்ற பதில் தான் வந்துள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருச்சி நகரத்தின் குறுகிய சாலைப் பகுதிகளையும் பொதுமக்களின் நெரிசலைப் பற்றியும் நன்கு அறிந்தவர்கள். தமிழ் மாநிலத்தில் மத்திய பகுதியில் அமைந்திருக்கும் திருச்சி நகரம் வியாபார ரீதியாகவும், சுற்றுலா ரீதியாகவும் அன்றாடம் பெருகிக் கொண்டிருக்கும் வாகன நெரிசலையும் ஜன நெரிசலையும் சந்தித்துக் கொண்டிருக்கிறது. எனவே இப்போக்குவரத்து நெரிசலால் அல்லலுறும் பாதசாரிகளின் இன்னல்கள் ஓரளவுக்கு நீங்கும் வண்ணம் திருச்சி ஜங்ஷன் ரவுண்டானா பகுதியில் சுரங்கப்பாதை அமைக்கும் திட்டத்தினை அரசு மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உடனடியாக செயல்படுத்த முடியாத திட்டத்திற்கெல்லாம் வாக்குறுதி தருவது இந்த அரசு அல்ல என்பதைத் தெரிவித்து கொள்கிறேன். நீங்கள் கேட்கிற திட்டங்களுக்கெல்லாம் உடனடியாக வாக்குறுதிகளைத் தந்துவிட்டு அதை அரசு நிறைவேற்றவில்லை என்று சொன்னால் அதற்காக இந்த அரசு பொறுப்பேற்க வேண்டும் என்ற பொறுப்புணர்ச்சியும் இந்த அரசுக்கு இருக்கின்ற காரணத்தினாலேயே இருக்கிற சூழ்நிலையை நிதி ஆதாரங்கள், அங்கே இருக்கின்ற பல்வேறு பிரச்சினைகளை வைத்துத்தான் எந்தத் திட்டத்தையும் செயலாக்க முடியும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றாக அறிவார்கள். ஆகவேதான் அந்தப் பகுதியிலே இருக்கின்ற, இரயில்வே நிர்வாகத்திற்குட்பட்ட நிலங்கள் மற்றும் நகராட்சி மற்றும் தனியாருக்குச் சொந்தமான பட்டா நிலங்கள், கட்டிடங்கள் இவற்றையெல்லாம் கையகப்படுத்துவதிலே பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. இப்போது இருக்கின்ற பிரச்சினையில், அங்கே போக்குவரத்து நெரிசல் அதிகம் இல்லை என்று இன்றைக்கு அரசு கணக்கு எடுத்துரைக்கிறது. அதற்கு மொத்தம் 50 லட்சம் ரூபாய் தேவை என்று சொல்லியிருக்கிறார்கள். மிகக் குறைந்த அளவு திட்டம்தான். இருந்தாலும் அதிலே நிலத்தை கையகப்படுத்துவதில் மிகப் பெரிய பிரச்சினை இருக்கிறது. ஆகவே 30 லட்சம் ரூபாய் நிலம் கையகப்படுத்த கொடுக்க வேண்டும். 20 லட்சம் ரூபாயில் பாலம் கட்ட வேண்டும். மதிப்பீடு குறைவாக இருந்தாலும் அங்கே இருக்கின்ற பிரச்சினைகளை இந்த அரசு கணக்கிலே எடுத்துத்தான் தற்போது இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள், ஆகவே தற்போது இல்லை என்று சொன்னாலே இந்தத் திட்டம் நிரந்தரமாக இல்லை என்று

அதற்குப் பொருள் அல்ல. இருக்கின்ற நிதி ஆதாரங்கள் பல்வேறு சூழ்நிலைகள் இவற்றை ஆராய்ந்து—திருச்சி நகரம் பெரிய நகரம் என்பதை இந்த அரசு அறியும். —அதற்கான நடவடிக்கைகளை எதிர்காலத்திலே இந்த அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் ஜி. ஆர். மாலா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விரிவான பதிலுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். திருச்சி நகரில் அதிக ஜனநெரிசல் உள்ள பாலக்கரை, பள்ளிகள் நிறைந்துள்ள மேலப்புதூர் மேம்பாலம் அருகில் மற்றும் திருச்சி ஜங்ஷன் மெயின்கார்ட் கேட் பகுதியில் சப்வே, சுரங்க நடைபாதைகள் அமைக்கும் திட்டத்தினை ஒரு 'மாஸ் ஸ்கீம்' ஆக எடுத்து அடுத்த நிதியாண்டிலேயாவது செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையிலே திருச்சி மிகப்பெரிய தொழில் நகரமாகவும் வணிக நகரமாகவும் இருக்கிறது என்பதை இந்த அரசு நன்றாக அறியும். ஆகவே அந்த நகரத்தை மேம்படுத்துவதற்கான பல்வேறு திட்டங்களை நாங்கள் வைத்திருக்கிறோம். அதிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன பிரச்சினைகள் அனைத்தும் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : டாக்டர் ச. ஆரோக்கியசாமி.

டாக்டர் ச. ஆரோக்கியசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தென் மாவட்டங்களுக்கு செல்வோர் திருச்சியில்தான் இறங்கிச் செல்கின்றார்கள். நம்முடைய மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கூட திருச்சியிலே இறங்கித்தான் அவருடைய ஊருக்குச் செல்கிறார்கள். ஆகவே அருள்கூர்ந்து திருச்சியிலே நிறைய ஜனத்திரள் கூடுகின்ற அந்த இடங்களில் எல்லாம் போக்குவரத்து வசதிக்காக சுரங்க நடைபாதைக் கட்ட மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து உத்தரவிடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தென் மாவட்டங்களுக்குச் செல்வோர் திருச்சியிலே இறங்குவதில்லை. வேண்டுமானால் பஸ்ஸுக்காக நிற்கின்ற நேரத்திலே கொஞ்சம்

இறங்கியிருப்பார்கள். அவர்கள் மதுரைக்கும் செல்வார்கள் திருநெல்வேலி பஸ்ஸும் செல்கிறது. கன்னியாகுமரிக்கும் செல்கிறது. பல்வேறு ஊர்களுக்குச் செல்கிறது. ஆக திருச்சியிலே இறங்கித்தான் செல்ல வேண்டும் என்று கட்டாயம் கிடையாது. ஏதாவது வேலையிருந்தால் போகின்றவர்கள் வேண்டுமானால் திருச்சியிலே இறங்கிச் செல்லலாமே தவிர தென் மாவட்டங்களுக்குப் போகின்றவர்கள் எல்லாம் அங்கே இறங்குவது இல்லை. இருந்தாலும் பொதுப்பணித் துறை அமைச்சரை பொறுத்தமட்டிலே, திருச்சியிலே இறங்கிப்போகிறார் மதுரையிலே இறங்கிப் போகிறார் என்பது எல்லாம் பிரச்சினை அல்ல. நான் ஏற்கெனவே தெரிவித்ததுபோல் எங்கு வேண்டுமானாலும் இறங்கிச் செல்லலாம். திருச்சியிலே சென்று எங்காவது போகவேண்டுமானால் திருச்சியிலே இறங்கிச் செல்கிறார்கள். அதை ஒரு காரணமாக ஏற்றுக்கொள்ள முடியாது. இருந்தாலும் நான் ஏற்கெனவே தெரிவித்ததுபோல், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை இந்த அரசு பரிசீலிக்கும். திருச்சியைப் பொறுத்தமட்டில், அந்த நகரத்தினுடைய முக்கியத்துவத்தை இந்த அரசு நன்றாக அறியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, வருங் காலத்திலே அதற்கான பணிகள் திட்டமிடப்பட்டு செயலாக்கப் படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 394, டாக்டர் எம். பி. சேகர், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

394—

பெரம்பூரில் மழைக் காலங்களில் மழை நீர் தேங்குதல்:

*9844—டாக்டர் எம். பி. சேகர்:

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரம்பூரில் மழைக் காலங்களில் மழைநீர் தேங்காமல் இருக்க வடிகால் வாரியம் துரிதமாகச் செயல்பட அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,